**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 622/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-5/PW-4 | Village: திருப்பனந்தாள் |
| Name | : சேகர் | Age :60 |
| Father's/Husband's Name | :வீராசாமி | Taluk : |
| Nationality | : Indian | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 26/09/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பனந்தாள், சன்னதி தெருவில் வசித்து வருகிறேன். நான் ஆசாரி வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அந்த கையொப்பத்தை என் வீட்டின் அருகில் நான் நின்று கொண்டிருந்தபோது என்னிடம் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பத்தை எப்போது, எதற்காக செய்தேன் என்று ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 09/09/2016 அன்று காலை 09.00 மணியளவில் நானும், மூர்த்தி என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசி கொண்டிருந்தபோது, திருப்பனந்தாள் காவல் நிலைய போலிசார் அசா1 மற்றும் எதிரிகளுக்கிடையே நடந்த சண்டை சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில் நாங்கள் இருவரும் பார்வை மகசரில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**